**In the Court of District Munsif-cum-Judicial Magistrate, Kilpennathur**
**OS.94/2024**
**Examination of PW1**

| | | |
|---|---|---|
| **Name** | : | ருக்மணி |
| **Father's Name** | : | ராமானுஜம் |
| **Village** | : | கணியாம்பூண்டி |
| **Taluk** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | **80** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 08.04.2025.**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

6. எனது வயது தற்போது 80 என்றால் ஆமாம். ஏரி வாய்க்காலுக்கு வடக்கு, அசோகன் கிரய நிலத்திற்கு கிழக்கு, ரோட்டிற்கு மேற்கு, செல்லம்மாள் நிலத்திற்கு தெற்கு இதன் மத்தியில் 40 சென்ட் ரங்கசாமிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் ஆமாம் என்று சாட்சி சொல்லிவிட்டு ரங்கசாமிக்கு ஒதுக்கியது எனக்கு எப்படி தெரியும், அந்த நாளில் என்ன ஒதுக்கினார்கள் என்று எனக்கு தெரியாது என்றும், வழக்கு சொத்தை நாங்கள் கிரயம் வாங்கினோம். கனியம்பூண்டி கிராமத்தைச்சேர்ந்த ராமமூர்த்தி நாயுடு மனைவி ஜெயலட்சுமி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். போலீஸ்காரர் மனைவி. மேற்படி ஜக்குபந்திக்கு உட்பட்ட சொத்தை ரங்கசாமி ஜெயலட்சுமிக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்று எனக்குத் தெரியுமா என்றால் கிரயம் கொடுக்கவில்லை. ரங்கசாமி 27.03.1979 தேதியில் ஆவண 237/1979 தேதியிட்ட ஆவணத்தின் படி ஜெயலட்சுமிக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் அந்த தேதியில் ரங்கசாமி உயிருடனேயே இல்லை. தற்போது கற்றறிந்த வழக்கறிஞர் இதுகுறித்த கேள்வியை மாற்றி மேற்படி 27.03.1979 தேதியில் ஆவண எண் 237/1979 ன்படி ரங்கசாமி குமாரர் கோவிந்தராஜி என்பவர் ஜெயலட்சுமிக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்று கேட்கிறார் அதற்கு சாட்சி 1979ல்தான் நாங்களும் அந்த சொத்தை கிரயம் வாங்கியிருந்தோம் என்று கூறுகிறார்.

7.கோவிந்தராஜ் மேற்படி கிரய பத்திரத்தில் சரியான புல எண்களான 39/8, 39/10 மற்றும் 39/11 ஆகியவற்றை குறிப்பிடாமல், ஆனால் சரியான ஜக்குபந்தியைக்

குறிப்பிட்டு, தவறாக புல எண். 31/4 ஐ குறிப்பிட்டு ஜெயலட்சுமிக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் அவர் எப்படி அவ்வாறு எங்கள் சொத்தை கிரயம் கொடுக்க முடியும். சர்வே எண்.39/8ல் 22 செண்ட், 39/10ல் 9 செண்ட், 39/11 ல் 11 செண்ட் ஆக மொத்தம் 42 செண்ட் எனது வீட்டுக்காரர் எனக்கு எழுதி வைத்துள்ளார். அவ்வாறு கிரயம் பெற்ற ஜெயலட்சுமிதான் மேற்படி ஜக்குபந்திக்கு உட்பட்ட சொத்தை ஓட்டி வந்தார் என்றால் ஜெயலட்சுமி கிரயம் வாங்கவில்லை. அவர் ஓட்டவில்லை. ஜெயலட்சுமி எனக்கு சம்பந்தி முறைதான். அவ்வாறு அந்த சொத்தை 18 ஆண்டுகளாக ஜெயலட்சுமி அனுபவித்து வந்து 01.09.1997 தேதியில் 1ம் பிரதிவாதி தமிழ்ச்செல்வனுக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் ஜெயலட்சுமி அவ்வாறு அனுபவிக்கவுமில்லை. தமிழ்ச்செல்வனுக்கு கிரயம் கொடுத்தது பற்றியும் எனக்கு தெரியாது. அந்த கிரயபத்திரத்தின் ஆவண எண்.671/1997 என்றால் ஜெயலட்சுமிக்கு சொத்தே கிடையாது. அவ்வாறு ஜெயலட்சுமி கிரயம் கொடுத்தபோது தவறான புல எண்ணான 31/4 க்கு பதில் சரியான புல எண்ணான 39/8, 39/10, 39/11 என குறிப்பிட்டு கிரயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் இல்லை ஜெயலட்சுமி கிரயம் வாங்கியது எனக்கு தெரியாது. அந்த மூன்று சொத்துக்களும் அருகருகே ஒரே ஜக்குபந்திக்கு உட்பட்ட சொத்துதான் என்றால் ஆமாம். ஏரி வாய்க்காலுக்கும் வடக்கு, செல்லம்மாள் நிலத்திற்கு தெற்கு, ரோட்டிற்கு மேற்கு, தனபால் நிலத்திற்கு கிழக்கு என குறிப்பிட்டு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் ஏரி வாய்க்கால் தற்போது இல்லை. மேற்கு மற்றும் தெற்கில் தமிழ்ச்செல்வன் நிலம், வடக்கில் முருகதாஸ் நிலம், கிழக்கில் ரோடு தற்போது இதுதான் இந்த சொத்தின் ஜக்குபந்தி. அவ்வாறு கிரயம் பெற்ற தமிழ்ச்செல்வன்தான் அந்த சொத்தை ஓட்டி வருகிறார் என்றால் அப்படி ஏமாற்றி ஓட்டி வருகிறார். எனது பிள்ளைகள் பிழைக்க வெளியூர் சென்றுவிட்டதால் தமிழ்ச்செல்வன் ஓட்டி வருகிறான். அவ்வாறு கிரயம் பெற்ற தமிழ்ச்செல்வன் 1998 லேயே தனது பெயருக்கு பட்டா எண்.277 பெற்றுள்ளார் என்றால் அது பொய்பட்டா. இந்த சொத்திற்கு எந்த காலத்திலாவது எனது பெயரில் பட்டா இருந்ததா என்றால் எனது பெயரில் பட்டா இல்லை ஆனால் மொத்த சொத்துக்கும் பட்டா உள்ளது. யார் பெயரில் உள்ளது என்றால் எனது வீட்டுக்காரர் பெயரிலும், எனது பையன் பெயரிலும் உள்ளது. இந்த சொத்துக்கு எனது கணவர் பெயரிலும், எனது மகன் பெயரிலும் பட்டா இருந்ததா என்றால் பட்டா இருந்ததா என்று எனக்கு தெரியாது. இந்த தாவா சொத்துக்கு எனது

பெயரிலோ, எனது கணவர் பெயரிலோ அல்லது எனது மகன் பெயரிலோ எந்த நாளிலும் பட்டா கொடுக்கப்படவில்லை. பட்டா இருந்ததும் இல்லை என்றால் 42 சென்ட் எனக்கு எழுதிக்கொடுத்தார்கள் ஆனால் பட்டா எழுதவில்லை. இந்த சொத்து எனக்கு பாத்தியப்படாத சொத்து என்பதால்தான் எந்தநாளிலும் பட்டா கொடுக்கப்படவில்லை அதற்கு நாங்கள் முயற்சியும் செய்யவில்லை என்றால் ஆமாம். பொறுமையாக தருகிறேன் போ என்றார்கள். நான் இவ்வாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த சொத்துக்கு நான் எப்போதாவது வரி கட்டியுள்ளேனா என்றால் எல்லா சொத்திற்கும் சேர்த்துதான் வரி கட்டினேன். இந்த சொத்திற்கோ அல்லது வேறு சொத்திற்கோ வரி கட்டியதற்கு ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. சொத்து என்னுடையது இல்லை என்பதாலும் இந்த சொத்தை எந்த நாளிலும் அனுபவிக்கவில்லை என்பதால்தான் வரி ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் நாங்கள் தான் அனுபவித்தோம். நடுவில்தான் எங்களை ஏமாற்றி அவர் அனுபவித்து வருகிறார். இந்த சொத்தை தமிழ்செல்வன் அனுபவித்து வந்ததால்தான் தொடர்ச்சியாக 2002, 2005, 2006 மற்றும் 2019 வருடங்களுக்கான வரி ரசீதுகளை எதிர் வழக்குரையுடன் சேர்த்து தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர் ஏமாற்றி வரி வாய்தா ரசீது வாங்கி வைத்துள்ளார். நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சட்டத்திற்கு உட்பட்டுதான் வரிரசீது பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. அவர் அனுபவித்து வந்த சொத்து என்ற அடிப்படையில்தான் தமிழ்செல்வன் கடந்த 29.05.2019 தேதியில் திருவண்ணாமலை ICICI வங்கியில் ஈடுகாட்டி கடன் பெற்றுள்ளார் என்றாலும் அந்த ஆவணத்தையும் எதிர் வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ளார் என்றாலும் கொள்ளையடித்த சொத்தை வைத்து ஏமாற்றி அடமானம் போட்டிருப்பார். அவர் சட்டத்திற்கு உட்பட்ட சரியான உரிமையாளரிடமிருந்து கிரயம் பெற்ற சொத்து நான் சொல்வது போல் கொள்ளையடிக்கவில்லை நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. யார் சொத்தை ஜெயா வாங்குவது. எனது ஊரைச்சேர்ந்த வெங்கட்ராம நாயுடு, செல்லம்மாள் ஆகியோரை எனக்கு தெரியுமா என்றால் வெங்கட்ராம நாயுடு தெரியாது. செல்லம்மாள் தெரியும். மிகவும் வயதானவர். ஏரிவாய்க்காலுக்கு தெற்கே சர்வே எண்.31/4 மொத்த விஸ்தீரணம் 2.20 ஏக்கர் நிலம் வெங்கட்ராம நாயுடு மற்றும் செல்லம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் செல்லம்மாளுக்கு சொத்து எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. அவளுடைய குரங்கு என்பவருக்குதான் அங்கு நிலம்

உள்ளதாக சொல்வார்கள். மேற்படி புல எண்.31/4ல் 1 ஏக்கர் 15 சென்ட் வெங்கட்ராம நாயுடுவும், 1 ஏக்கர் 5 சென்ட் செல்லம்மாளும் அனுபவித்து வந்தார்கள் என்றால் அப்படி அனுபவித்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. தற்போது யார் அனுபவிக்கிறார்கள் என்றும் எனக்கு தெரியாது. செல்லம்மாள் மகள் வயிற்று பேரனான பிச்சாண்டி மற்றும் பங்காரு ஆகியோரைத்தெரியுமா என்றால் தெரியும். அவர்களில் ஒருவர் இறந்து விட்டார். மேற்படி செல்லம்மாள் அவருடைய சொத்தை மேற்படி பிச்சாண்டி மற்றும் பங்காரு ஆகியோருக்கு 02.04.1977ல் தான செட்டில்மெண்ட் எழுதிவைத்து விட்டார் என்றால் ஆமாம். அந்த சொத்தை ஒப்புக்கொண்டு சுவாதீனம் எடுத்து மேற்படி இருவரும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது ஊரைச்சேர்ந்த தனபால் குமாரர் எத்திராஜ் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பிச்சாண்டி, பங்காரு இருவரும் அந்த சொத்தை எத்திராஜ் என்பவருக்கு கிரயம் கொடுத்து விட்டார்கள் என்றால் எத்திராஜ் வாங்கினாரா என்று எனக்கு தெரியாது. முருகதாஸ் தான் அந்த இடத்தை வாங்கினார். எத்திராஜ்தான் அந்த இடத்தை வாங்கினார் என்றாலும், அவர்தான் அதை அனுபவித்து வந்தார் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. எனது ஊரைச்சேர்ந்த வெங்கட்ராம நாயுடு குமாரர்கள் எத்திராஜுலு நாயுடு, முத்துசாமி, ராயல் நாயுடு ஆகியோர் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி மூவரும் வெங்கட்ராம நாயுடு இறந்தபிறகு அவருக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 15 சென்ட்டையும், மற்றும் இதர சொத்துக்களையும் 1973ல் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.31/4ல் 1 ஏக்கர் 15 சென்ட் மற்றும் இதர சொத்துக்கள் A Schedule ஆக காட்டப்பட்டு எத்திராஜுலு நாயுடு பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த சொத்தை எத்திராஜுலு நாயுடு சுவாதீனம் எடுத்து அரசுக்கு செலுத்தவேண்டிய தீர்வைகளை செலுத்தி அனுபவித்து வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு அனுபவித்து வந்த சொத்தை எத்திராஜ் நாயுடு 03.02.1988 தேதியில் கிரய ஆவண எண்.90/1988 மூலம் 1ம் பிரதிவாதி தமிழ்செல்வன் மற்றும் அவரது தந்தை துரைசாமிக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் எங்கள் சொத்துக்கு மேலே உள்ள அந்த சொத்தை தமிழ்செல்வன் தான் வாங்கி ஓட்டி வருகிறார். அந்த கிரயத்தை ஏற்படுததும்போது ஏரி வாய்க்காலுக்கு தெற்கு என்று குறிப்பிட்டுதான் கிரயம் ஏற்படுத்தினார்கள் என்றால் ஏரி வாய்க்காலே தற்போது இல்லை. ஏரிவாய்க்கால் இருந்த

போது தமிழ்ச்செல்வன்தான் ஓட்டிவந்தாரா என்றால் அவர் வாங்கி ஓட்டிவந்தார். எங்கள் சொத்தை நாங்கள் தான் ஓட்டி வந்தோம். அவ்வாறு ஜெயலட்சுமியிடமிருந்து கிரயம் பெற்ற தாவா புல எண்களான 39/8, 39/9 மற்றும் 39/11 க்கு உட்பட்ட சொத்துக்களையும் புல எண் 31/4 ல் 1ம் பிரதிவாதி தந்தை துரைசாமி கிரயம் பெற்ற 1 ஏக்கர் 15 செண்ட் நிலத்தையும், 1ம் பிரதிவாதி அவரது தந்தையும்தான் அனுபவித்து வந்தார்கள் என்றால் எங்களது சொத்தை ஜெயலட்சுமி எவ்வாறு கிரயம் கொடுக்க முடியும். சர்வே எண் 31/4 ல் 1 ஏக்கர் 15 செண்ட் எத்திராஜ் அனுபவித்து வந்து துரைசாமிக்கு கிரயம் கொடுத்த வகையில் துரைசாமி அனுபவித்து வந்து 1ம் பிரதிவாதிக்கு பாத்திய சொத்து என்றால் அது யாருக்கு சொந்தம் என்று எனக்கு தெரியாது. 39/8, 39/9, 39/11 சொத்துக்கள்தான் எங்கள் சொத்து. அது பற்றி மட்டும்தான் எனக்கு தெரியும். 31/4 சொத்து என்பதும், 39/8, 39/9, 39/11 க்கு உட்பட்ட சொத்தும் வேறு வேறு சொத்துக்கள் என்றால் சரிதான். 31/4 சொத்துக்கு வடக்கில்தான் 39/8, 39/9, 39/11 க்கு உட்பட்ட சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். இந்த இரண்டு சொத்துக்களையும் பிரிக்கும் வகையில் நடுவில் கிழக்கு மேற்காக ஏரி வாய்க்கால் இருந்ததா என்றால் இருந்தது. ஏரி வாய்க்காலுக்கு தெற்கில்தான் 31/4க்கு உட்பட்ட சொத்து உள்ளது என்றால் ஆமாம். அதேபோல் ஏரி வாய்க்காலுக்கு வடக்கில்தான் 39/8, 39/9, 39/11 க்கு உட்பட்ட சொத்து உள்ளது என்றால் ஆமாம். கோவிந்தராஜு குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் சர்வே எண்.31/4ல் மொத்த விஸ்தீரணம் 2.20 ல் 40 செண்ட் சரியான புல எண்கள் 39/8, 39/9, 39/11 என்றால் சரிதான். அதுதான் எங்கள் சொத்து. கோவிந்தராஜ் என்பவரிடம் இருந்துதான் நாங்கள் கிரயம் பெற்றோம். மேற்படி கோவிந்தராஜ் ஜெயலட்சுமிக்கு கிரயம் கொடுக்கும்போது சரியான புல எண்களான 39/8, 39/9, 39/11 க்கு பதிலாக தவறான புல எண்.31/4 என குறிப்பிட்டு கிரயம் கொடுத்துள்ளார் ஜெயலட்சுமிக்கு கிரயம் கொடுத்தது பற்றி எனக்கு தெரியாது. கோவிந்தராஜ் எங்களுக்கு தான் கிரயம் கொடுத்தார். அவ்வாறு கிரயம் கொடுக்கும்போது சரியான ஜக்குபந்தியை குறிப்பிட்டுதான் கிரயம் கொடுத்துள்ளார் என்றால் அது எங்கள் சொத்துதான். அதை ஏமாற்றி ஜெயா கிரயம் கொடுத்து விட்டார். அந்த வகையில் தாவா சொத்தைதான் கோவிந்தராஜ் ஜெயலட்சுமிக்கு கிரயம் கொடுத்தார் என்றால் அதே தாவா சொத்தைதான் கோவிந்தராஜ் எங்களுக்கு கிரயம் கொடுத்தார். ஜெயலட்சுமிக்கு கிரயம்

கொடுத்து 4, 5 மாதங்கள் கழித்துத்தான் சரியான புலஎண் குறிப்பிட்டு எனது கணவருக்கு மறுகிரயம் வாங்கியுள்ளார் என்றால் ஜெயலட்சுமி வாங்கியது எனக்கு தெரியாது. அந்த வகையில் ஜெயலட்சுமி 1ம் பிரதிவாக்கு கிரயம் கொடுத்தது சட்டத்திற்கு உட்பட்டு சரியானது என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

Taken down by me in open Court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-(G.Thamarai Ilango)
District Munsif-cum-Judicial Magistrate,
Kilpennathur.